வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 160 of 2014

வழக்கு சாட்சி - PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அரங்கராஜன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ரவீந்திரன் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 02.07.2025.

(எதிரி 2 ஆஜர்.எதிரி1 ஆஜர் இல்லை,எதிரி சார்பில் சட்டப்பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை தொடர்ச்சி :** **நாள் : 02.07.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் வங்கியில் வேலைய செய்து கொண்டு வருகிறேன். சம்பவ காலத்தில் பல்லடம் மனப்புறம் பைனான்சில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்தேன். மேற்படி நிறுவனத்தில் ரம்யா என்பவர் கிளை மேளாளராகவும், கணேசன் அஸிஸ்டன்ட் பிரான்ச் மேனஜராகவும் பணிபுரிந்து வந்தார்கள். அந்த நிறுவனத்தில் மாதம் இரண்டு முறை ஆடிட்டிங் வருவார்கள் 26.10.2009 ஆம் தேதி நிறுவனத்தை ஆய்வு செய்தபோது எங்கள் நிறுவனத்தின் பைனான்சில் அடகு வைத்த மூன்று பேர்களின் நகை சுமார் 71 கிராம் தங்க நகை காணமல் போய்விட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக கிளைர மேளாளர் ரம்யாவும், அஸிஸ்டன் மேனேஜர் கணேசன் என்பவர் மேலும் சந்தேகம் இருந்தது . இது சம்மந்தமாக எங்கள் ஏரியா மேனேஜர் ஹி ரிந்திரன் போலிஸில் புகார் கொடுத்தார். 01.11.2009 ஆம் பகல் 12.00 மணியளவில் மேற்படி நிறுவனத்துக்கு போலீஸார் விசாரணை மேற்கொண்டு பா்ாவை மகஜர் தயார் செய்தனர். அதற்கு சாட்சியாக நானும் அருண்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாம் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் அந்த பார்வை மகஜர் **அ.த.சா.1** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> :

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் MBA படித்துள்ளேன். நான் மனப்புறம் பைனான்சில் 07.10.2009 சேர்ந்தேன். பல்லடம் கிளையில் தான் முதலில் வேலை செய்தேன். அடகு வைத்த நகைகளை கணக்கீடு செய்வதற்கு எவ்வளவு முறை வருவார்கள் என்றால் மாதம் இரண்டு முறை வருவார்கள். அதற்கான பதிவேடுகள் பராமறிக்கப்படுகிறதா என்றால் பராமறிக்கப்படுகிறது. நான் வேலை செய்த கிளையிலும் அவ்வாறான பதிவேடுகள் பராமறிக்கப்படுகிறது என்றால் பராமறிக்கப்பட்டது. 26.10.2009 ல் எந்த கணக்காளர் பதிவேடுகளை சரிபார்த்தார் என்றால் ஹிஹரன் மற்றொருவர் பெயர் ஞாபகம் இல்லை. என்னுடைய வேலை என்னவென்றால் அடகு வைத்த சீட்டில் வாடிக்கையாளரிடமிருந்து கையொப்பம் பெறுவதும் மட்டும் என் வேலையாக இருந்தது. வாடிக்கையாளர்கள் அடகு வைக்கும் விவரம் மற்றும் தொகை அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டது என்றால் சரிதான். தணிக்கையாளர் தணிக்கை செய்த விவரங்களை கணினியில் பதிவேற்றம் செய்யப்படுவதுண்டா என்றால் உண்டு.

2) அந்த விவரங்களை எல்லாம் நான் அந்த சமயத்தில் பார்த்தது உண்டா என்றால் அப்படி நாங்கள் எதுவும் பார்க்க முடியாது. நான் யார் சொல்லி யார் மூலமாக 70 கிராம் குறைவாக இருக்கிறது என்பதை தெரிந்துக்கொண்டேன் என்றால் ரம்யா மற்றும் கணேசன் ஆகியோர் தான் சொன்னார்கள். எதிரிகள் எப்போது வேலைக்கு சேர்ந்தார்கள் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விவரம் எதிரிகள் சொல்லிதான்

தெரியும் என்று தற்போது சொன்ன விவரம் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் பத்து பதினைந்து வருடங்கள் ஆனதால் நியாபகம் இல்லை. பார்வை மகஜரில் எங்கு வைத்து நான் கையெழுத்து போட்டேனா என்றால் எங்கள் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் காவல் ஆய்வாளர் கையொப்பம் வாங்கினார். புகார் எப்போது கொடுத்தது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அடகு வைத்த நகைகளை எங்கு பாதுகாத்து வைப்போம் என்றால் ஸ்டராங் ரூமில் வைப்போம். அங்கு யார் வருகிறார்கள் போகிறார்கள் என்பதை கண்காணிக்க சிசிடிவி கேமராக்கள் பொறுத்தப்பட்டிருந்ததா என்றால் பொறுத்தப்பட்டிருந்தது.

3) நான் கையெழுத்து போட்ட மகஜரில் கண்காணிப்பு கேமரா பொறுத்தப்பட்டதை பற்றி குறிப்பிடப்பட்டதா என்றால் பல வருடங்கள் ஆனதால் எனக்கு ஞாபகம் இல்லை. பல வருடங்கள் ஆனதால் நான் எதில் கையொப்பம் போட்டேன் என்று எனக்கு நியாபகமில்லை யென்றால் ஒரு சில விவரங்கள் தெரியும் ஒரு சிலது நியாபகம் இல்லை. நான் கையெழு்த்துப்போட்ட அந்த காகிதம் கணினியில் அச்சிடப்பட்டிருந்ததா அல்லது பேனாவால் எழுதப்பட்டிருந்ததா என்றால் பேனாவில் எழுதப்பட்டிருந்தது. நான் காவல் நிலையம் சென்று கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை எங்கள் அலுவலகத்தில் வைத்துதான் கையொப்பம் பெற்றார்கள். தற்போது வழக்கு ஆவணங்களை பார்த்து விட்டு சாட்சியம் அளிக்கிறேனா என்றால் சரியல்ல. என்னுடைய அடையாள அட்டையை விசாரனையின் போது பெற்றுக்கொண்டார்களா என்றா ல் ஞாபகம் இல்லை. எங்கள் அலுவலகத்தில் வருகை பதிவேடு பராமறிப்பது உண்டா என்றால் உண்டு. அந்த பதிவேடு காவல் துறையினரால் கைப்பற்றதா என்றால் தெரியாது.

4) எனது முதல் விசாரணையில் சொன்னது போல் பார்வை மகஜர் மற்றும் வரைப்படம்

தயாரிக்கப்படவில்லை என்றாலும் பின்னிட்டு காவல் நிலையம் சென்று ஏற்கனவே தயாரிக்கப்பட் ட ஆவணங்களில் கையொப்பம் செய்தேனா என்றால் சரியல்ல. வரைப்படமும் பார்வை மகஜரும் ஒரே மொழியில் இருந்ததா என்றால் ஆமாம்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.07.02 17:30:44 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.